ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 5.9 – மானேய் நோக்கு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 5.9 – மானேய் நோக்கு

‡ மான் ஏய் நோக்கு நல்லீர் ! ⋆
வைகலும் வினையேன் மெலிய ⋆
வான் ஆர் வண் கமுகும் ⋆
மது மல்லிகை கமழும் ⋆
தேன் ஆர் சோலைகள் சூழ் ⋆
திருவல்லவாழ் உறையும் கோனாரை ⋆
அடியேன் அடி கூடுவதென்று கொலோ ‖ **5.9.1** ‖

என்று கொல் தோழிமீர்காள் ⋆
எம்மை நீர் நலிந்தென் செய்தீரோ ⋆
பொன் திகழ் புன்னை மகிழ் ⋆
புது மாதவி மீதணவி ⋆
தென்றல் மணம் கமழும் ⋆
திருவல்லவாழ் நகருள் நின்ற பிரான் ⋆
அடி நீறு அடியோம் கொண்டு சூடுவதே ‖ **5.9.2** ‖

சூடு மலர்க் குழலீர் ! ⋆
துயராட்டியேனை மெலிய ⋆
பாடு நல் வேத ஒலி ⋆
பரவைத் திரை போல் முழங்க ⋆
மாடுயர்ந்தோமப் புகை கமழும் ⋆
தண் திருவல்லவாழ் ⋆

நீடுறைகின்ற பிரான் ⋆
கழல் காண்டும் கொல் நிச்சலுமே ‖ **5.9.3** ‖

நிச்சலும் தோழிமீர்காள் ! ⋆
எம்மை நீர் நலிந்தென் செய்தீரோ ⋆
பச்சிலை நீள் கமுகும் ⋆
பலவும் தெங்கும் வாழைகளும் ⋆
மச்சணி மாடங்கள் மீதணவும் ⋆
தண் திருவல்லவாழ் ⋆
நச்சரவின் அணை மேல் ⋆
நம் பிரானது நன்னலமே ‖ **5.9.4** ‖

நன்னலத் தோழிமீர்காள் ! ⋆
நல்ல அந்தணர் வேள்விப் புகை ⋆
மை நலம் கொண்டுயர் விண் மறைக்கும் ⋆
தண் திருவல்லவாழ் ⋆
கன்னலம் கட்டி தன்னைக் ⋆
கனியை இன் அமுதம் தன்னை ⋆
என்னலம் கொள் சுடரை ⋆
என்று கொல் கண்கள் காண்பதுவே ‖ **5.9.5** ‖

காண்பதெஞ்ஞான்று கொலோ ⋆
வினையேன் கனிவாய் மடவீர் ⋆
பாண் குரல் வண்டினொடு ⋆
பசுந் தென்றலும் ஆகி எங்கும் ⋆
சேண் சினை ஓங்கு மரச் ⋆
செழுங்கானல் திருவல்லவாழ் ⋆

மாண் குறள் கோலப் பிரான் ⋆
மலர்த் தாமரைப் பாதங்களே ‖ **5.9.6** ‖

பாதங்கள் மேல் அணி ⋆
பூந் தொழக் கூடும் கொல் பாவை நல்லீர் ⋆
ஓத நெடும் தடத்துள் ⋆
உயர் தாமரை செங்கழுநீர் ⋆
மாதர்கள் வாள் முகமும் ⋆
கண்ணும் ஏந்தும் திருவல்லவாழ் ⋆
நாதன் இஞ்ஞாலம் உண்ட ⋆
நம் பிரான் தன்னை நாள்தொறுமே ‖ **5.9.7** ‖

நாள்தொறும் வீடின்றியே ⋆
தொழக் கூடும் கொல் நன்னுதலீர் ⋆
ஆடுறு தீம் கரும்பும் ⋆
விளை செந்நெலும் ஆகி எங்கும் ⋆
மாடுறு பூந் தடம் சேர் ⋆
வயல் சூழ் தண் திருவல்லவாழ் ⋆
நீடுறைகின்ற பிரான் ⋆
நிலம் தாவிய நீள் கழலே ‖ **5.9.8** ‖

கழல் வளை பூரிப்ப யாம் கண்டு ⋆
கை தொழக் கூடும் கொலோ ⋆
குழல் என்ன யாழும் என்னக் ⋆
குளிர் சோலை உள் தேன் அருந்தி ⋆
மழலை வரி வண்டுகள் இசை பாடும் ⋆
திருவல்லவாழ் ⋆

சுழலின் மலி சக்கரப் பெருமான் ⋆
அது தொல் அருளே ‖ **5.9.9** ‖

தொல் அருள் நல் வினையால் ⋆
சொலக் கூடும் கொல் தோழிமீர்காள் ⋆
தொல் அருள் மண்ணும் விண்ணும் ⋆
தொழ நின்ற திருநகரம் ⋆
நல் அருள் ஆயிரவர் ⋆
நலன் ஏந்தும் திருவல்லவாழ் ⋆
நல் அருள் நம் பெருமான் ⋆
நாராயணன் நாமங்களே ‖ **5.9.10** ‖

‡ நாமங்கள் ஆயிரம் உடைய ⋆
நம் பெருமான் அடி மேல் ⋆
சேமம் கொள் தென் குருகூர்ச் ⋆
சடகோபன் தெரிந்துரைத்த ⋆
நாமங்கள் ஆயிரத்துள் ⋆
இவை பத்தும் திருவல்லவாழ் ⋆
சேமம் கொள் தென் நகர் மேல் ⋆
செப்புவார் சிறந்தார் பிறந்தே ‖ **5.9.11** ‖

அடிவரவு — மானேய் என்று சூடு நிச்சலும் நன்னல காண்பது பாதங்கள் நாள்தொறும் கழல்வளை தொல்லருள் நாமங்கள் பிறந்தவாறும்

மானேய் நோக்கு முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்